THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.

Ammonium sulphate

* 93 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) who are the distributors of ammonium sulphate in Block Development or National Extension Service Block areas;

(*b*) whether such distributors could sell ammonium sulphate for cash; and

(*c*) whether ammonium sulphate is made available to agriculturists who can afford to purchase on cash without asking for loan from the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Co-operative Societies have been appointed as distributors of ammonium sulphate in National Extension Service and Community Development areas.

(*b*) Yes.

(*c*) Yes.

SRI S. LAZAR : சர்க்கார் இதுபோன்ற உத்திரவைப் பிறப்பித்திருந்தாலும்கூட சில பகுதிகளில், பணம் கொடுப்பவர்களுக்கும் அம்மோனியம் சல்பேட் கொடுக்கப்படாதது சர்க்காருக்குத் தெரியுமா? இதைத் தடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடம் அதுபற்றி தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் விவரங்களைக் கொடுத்தால் நான் கவனித்து வேண்டியதைச் செய்கிறேன்.

SRI V. S. MANICKASUNDARAM : அம்மோனியம் சல்பேட் கூட்டுறவு சொஸைடிகளின் மூலமாகவும் ஏஜெண்டுகள் மூலமாகவும் வினியோகிக்கப்படுவதைத் தவிர, தனிப்பட்ட முறையிலும் விற்கபபடுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தேசிய வளர்ச்சித் திட்டமும் சமுதாய நலத் திட்டமும் அமுலில் இல்லாத பகுதிகளில் தனிப்பட்ட நபர்களும் ஓரளவு வினியோகம் செய்கிறார்கள்.

SRI A. R. SUBBIAH MUDALIAR: நான் ப்ளாக் ஏரியாவிலும் கூட்டுறவு சொஸைடிகள் இருக்கவேண்டுமென்று சர்க்காருக்கு விண்ணப்பம் வந்திருக்கிறதா? அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் சர்க்கார் இப்போது யோசிக்கவில்லை.

SRI A. R. MARIMUTHU : இப்போது நமக்குக் கிடைக்கும் ரசாயனங்கள் போதாமலிருப்பதால் அதிகப்படியான ரசாயன உரங்களைப் பெறுவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது அதிகப்படியான உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுவருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் நமக்குப் போதுமான அளவு உரம் இறக்குமதியின் மூலம் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

[13th February 1958

Sri V. K. KOTHANDARAMAN : அம்மோனியம் சல்பேட் ஆந்திர ராஜ்யத்திற்கு லாரிகளில் கடத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி யானால் அதைத் தடுப்பதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்குமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஆந்திரப் பிரதேசத்தி லிருந்து இங்கே வருவதாகத்தான் நான் கேள்விப்படுகிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : பிளாக் டெவெலப்மெண்ட் ஏரியாக்களிலிருந்து ஒரு சில தனி நபர்கள் ரசாயன உரத்தை கூட்டுறவு சொஸைடியிலிருந்து வாங்கி லைஸென்ஸ் பெற்று வியாபாரம் செய்வது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி ஒரு ஏற்பாடும் இல்லை. அதுவரை அம்மாதிரி ஏற்பாடு இருந்தது. ஆனால் இப்போது ப்ளாக் டெவெலப்மெண்ட் ஏரியா பூராவிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யவேண்டுமென்ற ஏற்பாடு அமலுக்கு வந்தி ருக்கிறது. இருந்தாலும், தனி நபர்கள் எங்கேயாகிலும் விநியோகம் செய்தால் அதுபற்றி தகவல் கொடுத்தால் அதை நான் கவனிக்கிறேன்.

Sri K. S. ARDHANAREESWARA GOUNDER : சிந்திரியில் உற்பத்தியாகும் உப்பை நமது ராஜ்ய விவசாயிகள் அதிகமாகப் பயன்படுத்துவதால் அதை அதிகம் பெறுவதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சிந்திரி உர உற்பத்தி சாலைகள் சிலதான் நம் நாட்டில் இருக்கின்றன. எவ்வளவு அதிகமாக அந்த உரத்தை நாம் பெறமுடியும் என்பதில் இந்த சர்க்கார் கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது.

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : இந்த உரங்களை விவசாயிகள் பயன்படுத்த முடியாதபடி இடைத் தரகர்கள் அதிக விலைக்கு விற்பது சர்க்காருக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் இதைத் தடுப்பதற்கு நட வடிக்கை எடுப்பார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எனக்கு அதுபற்றி தகவல் ஒன்றும் வரவில்லை. விவசாயிகள் அதை உபயோகப்படுத்தவில்லை என்றால், ஏன் அதை அதிக விலை கொடுத்து இவர்கள் வாங்குகிறார்கள் என்பதைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

Sri K. ANBAZHAGAN : இந்த உரத்தின் உற்பத்திக் குறைவு காரணமாக நமது ராஜ்யத்தில் இதன் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதிருக்கும்போது, நெய்வேலியில் இந்த உரத்தை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அமைக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டதே? அது கவனிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அது அங்கிகரிக்கப்பட்டிருக்கி றது. சீக்கிரத்தில் வேலை துவக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

Sri K. B. S. MANI : தற்சமயம் உற்பத்தியாகிற உரம் போதுமான அளவு இல்லாததால் பல தாலுகா தலைநகரங்களில் இருக்கும் பெரு நிலச்சுவாந்தார்கள் இதை அதிகமாக வாங்கி ஸ்டாக் வைத்துக் கொள் வதால் சிறு நிலச்சுவாந்தார்களுக்கு இது கிடைப்பதில்லை என்பது சர்க் காருக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால், போதுமான அளவு உரம் உற்பத்தியாகும் வரையில் 'கோட்டா' ஸிஸ்டத்தை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி எந்தத் தகவலும் எனக்கு வரவில்லை. இது சம்பந்தமாக கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட விவரங்களை என்னிடம் கொடுத்தால் அவசியமான நடவடிக்கையை எடுப் பது பற்றி கவனிக்கிறேன்.